FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313247

1. District : மாவட்டம் Coimbatore | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year: ஆண்டு | FIR No.: மு.த.அ. எண் 19/2026 | Date: நாள் 23.09.2026 | 18.30hrs

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act 1988 as amended by 2018 and Sections பிரிவுகள்: 7(a), 7(A), 7(a) r/w 12 of

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: PC Act 13(2) r/w 13(1)(a) of PC

(iii) Act சட்டம்: BNS Sections பிரிவுகள்: Act and 316(5) BNS.

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 12.11.2025 | Date to : நாள் வரை 22.09.2026

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.09.2026 | Time : நேரம் 17oohrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D volume II | Time : நேரம் 17oohrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Tamil Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 32kms North Direction

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி Mettupalayam municipality office Coimbatore District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. N. Vijayakumar | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 54/2026 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Deputy Inspection Cell Officer / Tahsildar Collecte office coimbatore | (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Given in the Separate Sheet in Annexure -I attached

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Given in the Separate Sheets in Annexure-I attached here with

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23/9/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

23/09/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

D. SHEELA

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் .....
Rank: நிலை INSPECTOR No. எண் ..... OF POLICE
Vigilance and Anti Corruption
Coimbatore.

Submitted

Annexure -I

Attachment to Column No.7 of the First Information Report in Coimbatore Vigilance and Anti-Corruption Cr.No.19/2026/AC/CB

Accused

A-1 Tmt.R.Amutha, Commissioner, Mettupalayam Municipality, Coimbatore District.

A-2 Tmt.M.Ponmani, Administrative Officer, Mettupalayam Municipality, Coimbatore District.

A-3 Tr.S.Ravishankar, Town Surveyor, Mettupalayam Municipality, Coimbatore District.

A-4 Tr.S.Ajithkumar, Junior Assistant, Planning Section, Mettupalayam Municipality, Coimbatore District.

A-5 Tr.K.Premkumar, Revenue Assistant, Revenue Section, Mettupalayam Municipality, Coimbatore District.

A-6 Tmt.V.Padmapriya, Revenue Assistant, Revenue Section, Mettupalayam Municipality, Coimbatore District.

A-7 Tmt. Kalpana, Junior Assistant, A2-Section, Mettupalayam Municipality, Coimbatore District.

A-8 Tr.G.Devadharsan, Officer Assistant, General Section, Mettupalayam Municipality, Coimbatore District.

A-9 Tr.D.Gowthamdevan, Revenue Assistant, Revenue Section, Mettupalayam Municipality, Coimbatore District.

A-10 Tr.Mani, S/o. Palanigounder, D.No.4C, Shanthinagar, Mettupalayam (Private Individual)

A-11 Tr.Kavin Murugesan

Submitted

Annexure - II

Attachment to Column No.12 of the First Information Report (C 8313247) in Coimbatore V & AC Cr.No.19/2026/AC/CB u/s 7(a), 7A, 7(a) r/w 12, 13(2) r/w 13(1)(a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 and u/s 316(5) BNS.

இன்று 23.09.2026 ஆம் தேதி 17.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் D.ஷீலா ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது கோவை மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் திரு.N.விஜயகுமார் அவர்கள் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் N.விஜயகுமார், துணை ஆய்வுகுழு அலுவலர்/வட்டாட்சியர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோவை. ந.க.எண்.175/2026/ஐ1, நாள் 23.09.2026 அய்யா, பொருள்: திடீர் ஆய்வு - கோயம்புத்தூர் மாவட்டம் - மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகம் - திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அளித்தல் - சம்மந்தமாக. கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலக வரிவசூலர்கள், வருவாய் பிரிவு அலுவலர்கள், நகரமைப்பு அலுவலர்கள், நகர அளவை அலுவலர்கள் மற்றும் பொறியியல் பிரிவு ஆகிய பிரிவுகளில் பணிபுரியும் அலுவலர்கள் அவ்வலுவலகத்திற்கு கட்டிட அனுமதி பெறுவதற்கும், சொத்துகளை அளவீடு செய்து அதற்கான வரி நிர்ணயம் செய்து, வரி விதிப்பு புத்தகம் வழங்குவதற்கும், குடிநீர் இணைப்பு வழங்குவதற்கும், வரியினங்களில் பெயர் மாற்றம் செய்வதற்கும் வரும் பொதுமக்களிடமிருந்தும் ஒப்பந்ததாரர்களி டமிருந்தும் கையூட்டு பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில், கோயம்புத்தூர் மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலராகிய நான், கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் D.ஷீலா மற்றும் காவல் குழுவினருடன் இணைந்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 22.09.2026 ஆம் தேதி 14.00 மணிக்கு

புறப்பட்டு சென்று மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் திடீர் தணிக்கை செய்வதற்காக 22.09.2026 ஆம் தேதி 15.00 மணிக்கு வந்தடைந்தோம். அன்று 15.00 மணி முதல் மறுநாள் 23.09.2026 ஆம் தேதி 03.30 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. அந்த திடீர் தணிக்கையின் போது கண்டுபிடிக்கப்பட்ட விபரங்கள் பின்வருமாறு. முதலில் மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் தெற்கு பார்த்த வாசலுடன் அடுத்தடுத்து அமைந்திருந்த வரிவசூல் மற்றும் வருவாய் பிரிவில் நுழைந்தவுடன் அங்கிருந்த திரு.அரவிந்தன், திரு.முரளி, திரு.அங்கமுத்து ஆகியோரை விசாரிக்க அவர்கள் மூன்றுபேரும் ஒப்பந்ததாரர்கள் எனவும், அவர்கள் அவ்வலுவலகத்தில் நிலுவையிலுள்ள பில் சம்மந்தமாக விசாரிக்க வந்ததாகவும் தெரிவித்தார்கள். மேலும் அவர்கள் அனைவரையும் சோதனை செய்த போது அவர்களிடம் முறையே பணம் ரூ.200/-, ரூ.40/- மற்றும் ரூ.100/- இருந்தது. மேற்படி பணம் அனைத்தும் அவர்களின் சொந்த பணம் என்று கூறியதால், அத்தொகைகள் அவர்களிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. தொடர்ந்து அங்கிருந்த ஒரு நபரை விசாரிக்க அவரது பெயர் மணி என்றும், தான் தனது நண்பர் ஜெமேசா என்பவருக்கு குடிநீர் இணைப்பு கட்டணம் ரூ.17,577/-ஐ கட்ட வந்திருக்கும் விபரத்தை தெரிவித்தார். அவரிடம் இருக்கும் பணத்தை பற்றி விசாரிக்க அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.22,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது சம்மந்தமாக அவர் சொன்ன ஜெமேசா என்பவரை 9944711941 என்ற நம்பரில் தொடர்பு கொண்டு விசாரித்த போது அவர் குடிநீர் இணைப்பு கட்டணத்தை G.Pay மூலம் அவ்வலுவலகத்தின் பிட்டர் தர்மலிங்கம் என்பவருக்கு செலுத்திவிட்டதாகவும், மணி என்று யாரையும் தனக்கு தெரியாது என்று கூறினார். மேலும் மேற்படி பணம் பற்றி மணி அவர்கள் முன்னுக்குபின் முரனாக பதில் அளித்ததன்பேரில் மேற்படி பணம் நகராட்சிக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டுவந்த பணம் என்று கருதி மேற்படி பணம் ரூ.22,000/- விசாரணைக்ககாக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடம் வேறுபணம் ஏதேனும் உள்ளதா என்று விசாரிக்க அவரிடமிருந்து பணம் ரூ.1880/-ஐ எடுத்து ஆஜர் செய்து அது அவரது சொந்த பணம் என்று சொன்னதால் மேற்படி பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அங்கிருந்த மற்றொரு நபரை பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.கௌதம்தேவன் என்றும் தான் அவ்வலுவலகத்தில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், தான் வார்டு எண்கள் 8, 14, 20 மற்றும்

24 ஆகியவற்றை கவனித்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் இருந்த பணத்தை பற்றி விசாரிக்க, அவர் தான் ரொக்கப்பணம் ரூ.1,00,000/-ஐ தனது கைப்பையிலும், ரூ.10,000/-ஐ சட்டை பாக்கெட்டிலும் வைத்திருப்பதாக கூறியவரை விசாரித்து கொண்டிருந்தபோதே, அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.1,00,000/-ஐ (500X200) மட்டும் எடுத்து கேஷ் கவுண்டரில் இருந்த திரு.தேவதர்ஷன் என்ற கேசியரிடம் கொடுத்து அன்றைய வரி வசூல் செய்த பணம் என்றும் பணம் கொடுத்தவர்களது பெயரை ரசீது போடும்போது தெரிவிப்பதாக கூறினார். அதனை தொடர்ந்து திரு.கௌதம்தேவனிடம் மேற்படி பணம் யாரிடம் வசூல் செய்யப்பட்டது என்பதை குறித்து விசாரிக்க அவர் திருமதி.ஜெயராணி, கணவர் பெயர் திரு.சுந்தரம் கதவு எண்.41A, அன்னூர் ரோடு, மேட்டுப்பாளையம், கோவை, போன் நெம்பர் 9802223199 என்ற முகவரியில் உள்ளவரிடமிருந்து வசூலிக்கப்பட்டது என்று கூறினார். எனவே மேற்படி போன் நெம்பருக்கு தொடர்பு கொண்டு அந்த நபரிடம் பேசிய போது அதில் ஒருவர் தனது பெயர் பாபு என்றும், தனது அம்மா பெயர் ஜெயராணி என்பவர் பெயரில் சொத்து உள்ளது என்றும் மேற்படி விலாசம் தங்களுடையது தான் என்றும் தான் ரூ.56,116/- தொகைக்கு நகராட்சிக்கு கட்ட வேண்டிய வரிக்கு ரசீதை அன்று பெற்றுவிட்டதாவும், ஆனால் அதற்கான தொகையை இன்னும் யாரிடமும் செலுத்தவில்லை என்றும், இனிமேல்தான் செலுத்த வேண்டும் என்றும் கூறினார். இதனால் மேற்படி திரு.கௌதம்தேவன் வைத்திருந்த மொத்த பணம் ரூ.1,10,000/- கணக்கில் வராத பணம் என்றும், லஞ்சபணமாக இருக்க கூடும் என்று கருதி மேற்படி பணம் ரூ.1,10,000/-ஐ விசாரணைக்ககாக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.கௌதம்தேவன் அவர்களிடம் இருந்து சொந்த பணத்தை பற்றி கேட்க அவரிடமிருந்து பணம் ரூ.140/- ஐ எடுத்து ஆஜர் செய்ததால், அந்த பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அங்கு கேஷ் கவுண்டரில் இருந்த கேசியர் திரு.தேவதர்ஷன் என்பவரை விசாரிக்க அவர் அவ்வலுவலகத்தில் அலுவலக உதவியாளராக 16.08.2024 தேதி முதல் பணிபுரிந்து வருவதாகவும், B.Com., C.A., படித்துள்ளதால் தன்னை நகராட்சி வரி வசூல் செய்யும் கேஷ்சியராக அவ்வலுவலகத்தில் பணியமர்த்தி உள்ளதாகவும் தெரிவித்தார். அவரிடம் 22.09.2026 ஆம் தேதியில் வசூலான தொகை பற்றி கேட்க, அவர்

அங்கிருந்த கணினியில் அந்த விவரத்தை பிரிண்ட் எடுத்து காண்பித்து பணம் ரூ.2,38,603/- வசூலாகிய உள்ள விபரத்தை கூறினார். அப்போது அங்கு கேஷ் டிராயரில் இருந்த பணத்தை அவரை எண்ணி பார்க்க சொல்ல அவரும் அதனை எண்ணி பார்த்து அதில் பணம் ரூ.1,17,580/- இருந்தது. மீதி பணம் ரூ.1,21,023/- பற்றி அவரிடம் கேட்க, அவர் அந்த பணம் அவ்வலுவலகத்தின் வருவாய் பிரிவில் பணிபுரியம் பில் கலெக்டர் திருமதி.பத்மபிரியா ரூ.1,16,023/-மும் மற்றும் கிளர்க் திருமதி.கல்பனா அவர்கள் ரூ.5,000/-மும் செலுத்த வேண்டும் என்று கூறினார். இதனை பற்றி அவரிடம் விசாரிக்க கடந்த 09.09.2026 ஆம் தேதி முதல் இன்று வரை கொஞ்சம் கொஞ்சமாக திருமதி.பத்மபிரியா அவர்களால் வசூல் செய்யப்பட்டு தன்னிடம் பணம் செலுத்தாமல் உள்ளதாகவும், பணத்தை செலுத்திவிடுவதாக சொல்லி ரசீது மட்டும் பெற்றுக்கொண்டதாகவும், ஆனால் அதுவரை அவர் பணம் செலுத்தவில்லை என்றும் கூறினார். மேலும் குறைவாக இருக்கும் மற்றொரு தொகையான ரூ.5000/- பற்றி விசாரிக்க அது இவ்வலுவலகத்தில் தொழில் வரி வசூல் செய்யும் கிளர்க் திருமதி.கல்பனா என்பவர் கல்யாண் ஜூவல்லரி என்ற கடையில் இருந்த GPay மூலமாக தொழில் வரி ரூ.5000/- பெற்றுள்ளார், அதற்கான பில் போடப்பட்டுவிட்டது எனவும், ஆனால் அந்த பணம் அவர் நகராட்சி கணக்கிற்கு செலுத்தவில்லை என்றும் கூறினார். இதனால் வருவாய் பிரிவிற்கு சென்று அங்கிருந்த மேற்படி பில் கலெக்டர் திருமதி.பத்மபிரியா அவர்களை விசாரித்த போது, அவர் தான் கடந்த 09.09.2026 தேதி முதல் 21.09.2026 வரை கொஞ்சம் கொஞ்சமாக வரி வசூல் செய்து நகராட்சி கேஷியரிடம் பணம் செலுத்தாமல், பணம் செலுத்திவிடுவதாக சொல்லி ரசீது மட்டும் பெற்றுக்கொண்டதாகவும், ஆனால் இதுவரை நான் பணம் செலுத்தவில்லை என்றும் அந்த பணம் தற்போது தன்னுடைய IDBI வங்கி கணக்கு எண்.1624104000082828-ல் இருக்கிறது எனவும், நகராட்சியில் பணம் செலுத்த பயன்படுத்தப்படும் QR Code சில நாட்களாக வேலை செய்யாமல் இருந்து வருகிறது என்றும், அதனால் தன்னால் பணம் செலுத்த முடியாமல் போனது என்றும் கூறினார். மேலும் இது சம்மந்தமாக திருமதி.கல்பனா அவர்களிடம் கேட்ட போது அவரும் மேற்படி நகராட்சியில் பணம் செலுத்த பயன்படுத்தப்படும் QR Code சில நாட்களாக வேலை செய்யாமல் இருந்து வருகிறது என்ற காரணத்தையே

கூறினார். இது சம்மந்தமாக நகராட்சி ஆணையர் திருமதி.R.அமுதா அவர்களிடம் விசாரித்த போது அவர் மேற்படி பில் கலெக்டரால் வசூல் செய்யப்படும் வரித் தொகைகளை நகராட்சியின் கணக்கில் செலுத்தாமல், அலுவலர்களின் சொந்த கணக்கில் வைக்ககூடாது என்றும், அது தவறு என்றும் QR Code வேலை செய்யவில்லை என்றால் கூட வங்கியில் நேரடியாக நகராட்சி ஆணையர் கணக்கிற்கு செலுத்தியிருக்க முடியும் என்றும் கூறினார். எனவே மேற்படி பணம் ரூ.1,16,023/-ஐ ஆன்லைன் மூலமாக அப்போது அவர் செலுத்த ஆணையாளர் அனுமதித்தன் பேரில் மேற்படி பணத்தை திருமதி.பத்மபிரியா அவர்கள் நகராட்சி வங்கி கணக்கிற்கு ஆன்லைன் மூலமாக செலுத்தினார். மேலும் அவரிடம் வேறு பணம் உள்ளதா என்பதை பற்றி விசாரித்தபோது அவர் அன்று தன்னுடைய வார்டு பொது மக்களிடமிருந்து வரி வசூல் செய்த பணம் ரூ.9550/- மற்றும் தனது சொந்த பணம் ரூ.550/- உள்ளது என்று தெரிவித்தார். மேற்படி பணம் ரூ.9550/- உண்டான கணக்கை பற்றி கேட்ட போது அவர் மிட்டாலால் என்ற வீட்டு உரிமையாளரிடம் வரி வசூல் பணமாக பெற்றதாகவும் கூறியதன் பேரில், மிட்டாலால் அவர்களிடம் போன் மூலம் தொடர்பு கொண்டு பேசி உறுதி செய்யப்பட்டது. எனவே மேற்படி வரி வசூல் செய்த பணம் நகராட்சிக்கு கட்ட சொல்லி திருப்பி கொடுக்கப்பட்டது. சொந்த பணம் ரூ.550/- ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் கிளர்க் திருமதி.கல்பனா அவர்கள் கூறுகையில் திரு.பிரேம்குமார் பில் கலெக்டர் அவர்கள் பொது மக்களிடம் வரி வசூல் செய்த தொகை ரூ.35,744/-ஐ நகராட்சிக்கு செலுத்துவதற்காக கடந்த 11.09.2026 ஆம் தேதியில் GPay மூலமாக தனக்கு அனுப்பிவைத்தாகவும், ஆனால் தான் அன்றைய தினம்வரை நகராட்சி கணக்கில் செலுத்தாமல் தன்னுடைய Indian வங்கி கணக்கு 6268771180-ல் வைத்துள்ளதாகவும் தெரிவித்து மேற்படி செலுத்தவேண்டிய தொகையான ரூ.5000/- மற்றும் ரூ.35,744/-ஐ அடுத்த நாள் 23.09.2026 காலையில் செலுத்தி விடுவதாக தெரிவித்தார். அதனை தொடர்ந்து அந்த அலுவலகத்தின் மேற்குபுறம் இருந்த தகவல் மையத்தை பார்வையிட்டு அங்கிருந்தவரை விசாரித்ததில் எதுவும் கைபற்றப்படவில்லை. அதனை தொடர்ந்து அங்கிருந்தவர்களையும் விசாரித்து, அந்த அறையை பார்வையிட்டதில் அங்கும் எதுவும் கைபற்றப்படவில்லை. அதனை

தொடர்ந்து அங்கு வந்த பில் கலெக்டர் திரு.பிரேம்குமார் அவர்களை நகராட்சி அலுவலகத்திற்கு வரவழைத்து வருவாய் பிரிவில் வைத்து விசாரித்த போது தான் இங்கு கடந்த 23.03.2018 முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வந்ததாகவும், பின்னர் ஒரு வருடம் கழித்து பில் கலெக்டராக வார்டு எண்.7, 25, 28, 29 மற்றும் 30 ஆகியவைகளை கவனித்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் கல்பனா அவர்களுக்கு அனுப்பிவைத்த வரி வசூல் தொகை ரூ.35,744/- பற்றி கேட்டபோது மேற்படி தொகையானது தான் கடந்த 10.09.2026 ஆம் தேதி பொதுமக்களிடமிருந்து வரி வசூல் செய்ததாகவும், அன்றைய தினம் QR Code வேலை செய்யாததால், மேற்படி பணத்தை அடுத்த நாள் 11.09.2026 ஆம் தேதி அவ்வலுவலகத்தில் கிளர்க்காக பணிபுரியும் திருமதி.கல்பனா அவர்கள் கேஷியராக பணிசெய்து வந்ததால் அன்றைய தினமே நகராட்சிக்கு செலுத்தி பில் கொடுக்க சொல்லி அவருடைய GPay-க்கு அனுப்பிவைத்தாகவும், இதுநாள் வரை பணம் செலுத்தியதற்கான பில் கொடுக்கவில்லை என்றும் கூறினார். மேலும் அவரிடம் இருக்கும் பணம் பற்றி விசாரிக்க அவர் பயன்படுத்தி வரும் இரும்பு பிரோவில் பணம் ரூ.6900/- இருப்பதாகவும், தனது இரு சக்கர வாகனத்தில் பணம் ரூ.30,000/- இருப்பதாகவும் கூறி மேற்படி இரண்டு பணத்தையும் எடுத்து ஆஜர் செய்து, மேற்படி பணம் கோவை, அன்னூர் ரோடு, சுந்தரம் டைப் அலுவலகம் வைத்து நடத்தி வரும் திரு.பாபு, த/பெ.சுந்தரம் என்பவரால் அவருடைய சொத்து வரி செலுத்த வேண்டி தன்னிடம் கொடுத்த பணம் என்று கூறினார். உடனே திரு.பாபு என்பவரை அவ்வலுவலகம் வரவழைத்து விசாரித்த போது அவர் தான் 21.09.2026 அன்று பணம் ரூ.30,000/- மட்டுமே வரிசெலுத்த பில் கலெக்டர் திரு.பிரேம்குமார் அவர்களிடம் கொடுத்ததாகவும், வேறு எந்த பணமும் கூடுதலாக கொடுக்க வில்லை என்றும் கூறினார். இதனால் மேற்படி திரு.பிரேம்குமார் அவர்கள் வைத்திருந்த பணம் ரூ.30,000/-ஐ நகராட்சி கணக்கில் கட்ட சொல்லியும், கூடுதலாக வைத்திருந்த பணம் ரூ.6,900/-ஐ கணக்கில் வராத பணம் என்றும், லஞ்சமாக பொது மக்களிடம் பெற்ற பணமாக இருக்க கூடும் என்று கருதி மேற்படி பணம் ரூ.6,900/-ஐ விசாரணைக்ககாக கைப்பற்றப்பட்டது. மேலும் பில் கலெக்டர்கள் திருமதி.பத்மபிரியா, திரு.பிரேம்குமார், திரு.கௌதம்தேவன், கிளர்க் திருமதி.கல்பனா, அலுவலக

உதவியாளர் / கேஷியர் திரு.தேவதர்ஷன் ஆகியோர்களை தனிதனியாக விசாரிக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. மேலும் அவ்வலுவலகத்தில் இருந்த உதவி வருவாய் அலுவலர் திரு.பழனிவேல் ராஜன் என்பவரை விசாரித்த போது அவர் கடந்த 13.10.2025 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் பணம் பற்றி விசாரித்து அவரது பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அந்த அறையிலிருந்த அலுவலக ஊழியர்களிடமிருந்து வேறு எந்த பணமும் கைப்பற்றப்படவில்லை. பின்னர் வருவாய் பிரிவினை ஒட்டியிருந்த பொதுபிரிவினை பார்வையிட்டதில் நிர்வாக அலுவலர் என்று குறிப்பிட்டிருந்த கேபினுள் அமர்ந்திருந்தவரை விசாரிக்க அவர் தனது பெயர் பொன்மணி என்றும் தான் கடந்த ஒரு வருட காலமாக அவ்வலுவலகத்தில் நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் பணம் குறித்து கேட்க அவர் தன்வசம் வைத்திருந்த ரூ.200/-ஐ எடுத்து ஆஜர் செய்தார், அது அவரது சொந்தபணம் என்று சொன்னதால் அப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவர் வைத்திருந்த OnePlus Nord CE3 Lite 5G (Model:CPH2467) போனில் இருந்த Google Pay பரிவர்த்தனைகளை சோதனை செய்ததில். அதில் தான் பயன்படுத்திவரும் SBI வங்கி பொள்ளாச்சி கிளை கணக்கு எண்.40523129738 மற்றும் XXX2266 என முடியும் இந்தியன் வங்கி மேட்டூர் கிளை கணக்கு ஆகியவற்றில் பின்வரும் பண பரிவர்த்தணைகள் காணப்பட்டது.

S.No.	Date	Transaction Details	Amount	Remarks
1.	12.11.2025	Kavin Murugeshan – 6382764256	30000	RDMA -Quota
2.	03.12.2025	Kavin Murugeshan – 6382764256	1500	RDMA -Quota
3.	03.12.2025	Kavin Murugeshan – 6382764256	1500	RDMA -Quota
4.	05.12.2025	Kavin Murugeshan – 6382764256	30000	RDMA -Quota
5.	09.01.2026	Kavin Murugeshan – 6382764256	30000	RDMA -Quota
6.	11.02.2026	Kavin Murugeshan – 6382764256	30000	RDMA -Quota
7.	17.03.2026	Kavin Murugeshan – 6382764256	30000	RDMA -Quota
		Total	**1,53,000**	

மேற்படி பண பரிவர்த்தனைகள் குறித்து திருமதி.பொன்மணி என்பவரை விசாரிக்க, அவர் திருப்பூரில் உள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திரு.ராஜாராம் அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.30000/-ஐ, Kavin Murugeshan என்ற

பெயரில் உள்ள Google Pay செல்நம்பர் 6382764256-க்கு அனுப்பிவைக்கும்படி வெள்ளக்கோவில் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் வருவாய் ஆய்வாளர் திரு.முருகானந்தம் என்பவரிடமிருந்து தனக்கு கிடைக்கும் தகவலின் அடிப்படையில் தான் தனது நகராட்சி ஆணையாளர் திருமதி.அமுதா அவர்களின் உத்தரவின்பேரில், அவ்வலுவலக வருவாய்பிரிவு பொறியியல் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவுகளில் இருந்து தலா ரூ.10,000/- வீதம் வாங்கி, மேற்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திரு.ராஜாராம் அவர்களுக்கு ரூ.30,000/- மாதாமதம் அனுப்பி வரும் விபரத்தை தெரிவித்தார். மேலும் மேற்படி தொகைகளை ஆணையாளரின் உத்தரவின்படி, நகரமைப்பு பிரிவில் இருந்த ஆய்வாளர் திருமதி.மீனாட்சி, வருவாய் பிரிவில் திரு.கவுதம் மற்றும் பொறியியல் பிரிவிலிருந்து ரூ.10,000/-ஐ நகராட்சி பொறியாளர் கூறும் ஏதேனும் ஒரு ஒப்பந்ததாரரிடமிருந்து தனது Google Pay எண்.9443722133-ன் மூலம் கடந்த 12.11.2025 முதல் 17.03.2026 வரை 5 மாதங்கள் ரூ.30,000/- வீதம் வாங்கி மொத்தம் ரூ.1,50,000/- அனுப்பிவைத்த விபரத்தை தெரிவித்தார். மேலும் கடந்த 03.12.2025-அன்று இரண்டு தவனைகளில் ரூ.1500/- வீதம் மொத்தம் ரூ.3000/- மேற்படி எண்ணிற்கு அவசரதேவை என தெரிவித்ததின் பேரில் அனுப்பிவைத்ததாகவும் மேலும் மேற்கண்ட வகையில் மொத்தம் ரூ.1,53,000/-ஐ 17.03.2026-வரை அனுப்பி வைத்ததாக தெரிவித்தார். மேலும் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து மேற்படி வருவாய் ஆய்வாளர் திரு.முருகானந்தம் அவர்கள் பணம் எதுவும் கேட்காததால் தான் பணம் எதுவும் அனுப்பவில்லை என்று விபரத்தை தெரிவித்தார். எனவே மேற்படி Google Pay மூலம் பெறப்பட்ட மொத்த தொகை ரூ1,53,000/- ஆனது லஞ்சத்தொகையாக கருதப்படுகிறது. மேலும் மேற்படி பொதுப்பிரிவு அலுவலர்கள் அனைவரும் விசாரிக்கப்பட்டு, அவர்களது இருக்கைகள் மற்றும் செல்போன்களை சோதனை செய்ததில் குறிப்பிடும்படி எதுவும் காணப்படவில்லை. அதனை தொடர்ந்து பொறியியல்பிரிவின் இருக்கை பணியாளர்களான திரு.விஜயகுமார், வருவாய் உதவியாளர், திரு.ஆஷிஷ் நேமா, வருவாய் உதவியாளர் மற்றும் ஒப்பந்ததாரர் திரு.சன்ஜய் ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டு, அவர்களது இருக்கைகள் மற்றும் செல்போன்களை சோதனை செய்ததில் குறிப்பிடும்படி எதுவும் காணப்படவில்லை.

அவ்வலுவலகத்தின் முதல்தளத்தில் தெற்கு பகுதியில் வடக்கு பார்த்து அமைந்திருந்த சர்வே பிரிவினை பார்வையிட்டதில் அங்கு ஆஜரில் இருந்தவரை விசாரிக்க அவர் தனது பெயர் அபிஷேக் ஜெபா என்றும், தான் கடந்த 20-நாட்களாக தற்காலிக பணியாளராக அவ்வலுவலகத்தில் வேலை செய்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் பணம் குறித்து கேட்க தன்னிடம் இருந்த ரூ.20/-எடுத்து ஆஜர் செய்து, அது அவரது சொந்தபணம் என்று சொன்னதால், அப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. தொடர்ந்து அங்கிருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் சுஜிக்குமாரி என்றும் தான் அவ்வலுவலகத்தில் சமுதாய அமைப்பாளராக பணிபுரிந்து வருவதாகவும், அவரிடம் பணம் குறித்து கேட்க தன்னிடம் இருந்த ரூ.50/-எடுத்து ஆஜர் செய்து, அது அவரது சொந்தபணம் என்று சொன்னதால், அப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அவ்வலுவலகத்தில் ஆஜரில் இருந்த மூன்றாவது நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு.ரவிசங்கர் என்றும் தான் அவ்வலுவலகத்தில் நகர சார் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தவரிடம் பணம் குறித்து விசாரிக்க அவர் தன்னிடமிருந்த ரூ.850/-எடுத்து ஆஜர் செய்து, அது அவரது சொந்தபணம் என்று சொன்னதால், அப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. தொடர்ந்து மேற்படி ரவிசங்கர் என்பவர் பயன்படுத்தி வரும் POCO Model செல்போனில் இருந்த Google Pay மற்றும் ICICI வங்கி App-களில் காணப்பட்ட பண பரிவர்த்தனைகளை பார்வையிட்டதில் மேற்படி ரவிசங்கரின் பெயரிலிருந்த ICICI வங்கி கணக்கு எண்.085101506313 ஆகியவற்றை சோதனை செய்தீர்கள். அதில் நான் பயன்படுத்திவரும் ICICI வங்கி கோயம்பேடு கிளை கணக்கு எண்.085101506313-ல் கீழ் கண்ட பரிவர்த்தணைகள் காணப்பட்டது.

S.No.	Date	Transaction Details	Amount
1.	02.06.2026	ATM Cash Deposit	28000
2.	20.06.2026	ATM Cash Deposit	17500
3.	23.06.2026	ATM Cash Deposit	27500
4.	26.06.2026	ATM Cash Deposit	18000
5.	30.06.2026	ATM Cash Deposit	19000
6.	03.07.2026	ATM Cash Deposit	14500

7.	04.07.2026	ATM Cash Deposit	8500
8.	11.07.2026	Account Transfer – Dhanapal **(Licensed private Surveyor)**	7500
9.	19.07.2026	ATM Cash Deposit	19000
10.	14.08.2026	ATM Cash Deposit	30000
11.	02.09.2026	ATM Cash Deposit	9000
12.	10.09.2026	Account Transfer – Marappan (Father)	44999
13.	18.09.2026	ATM Cash Deposit	2500
14.	22.09.2026	ATM Cash Deposit	50000
		Total	**2,95,999**

மேலும் மேற்படி பணம் பரிவர்த்தனைகள் சம்பந்தமாக திரு.ரவிசங்கர் அவர்களை விசாரிக்க, மேற்சொன்ன ATM Cash Deposit அனைத்தும் தன்னுடைய மனைவி கொடுத்த தொகையிலிருந்து தனது வங்கியில் செலுத்தியபணம் என்றும், 11.07.2026-ம் தேதி பெறப்பட்ட தொகையான ரூ.7500/-ஆனது தான் அளவீடு செய்த நிலம் தொடர்பாக Licensed private Surveyor திரு.தனபால் என்பவர் தனக்கு அனுப்பிய தொகை என்றும், 10.09.2026 ஆம் தேதி பெறப்பட்ட தொகையான ரூ.44,999/-ஐ தனது அப்பா திரு.மாரப்பன் என்பவர் அவரது வங்கி கணக்கில் இருந்து தனது வங்கி கணக்கில் Deposit செய்துள்ளார் என்று தெரிவித்தார். மேலும் மேற்படி திரு.ரவிசங்கர் என்பவரது மாதாந்திர ஊதியமானது State Bank of India வங்கி ஈரோடு மாவட்டம் அரச்சலூர் கிளையின் வங்கி கணக்கு எண்:3239281431-ல் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தின் அடிப்படையில் அதன் Gpay-Account-ஐ பார்வையிட அதில் கீழ்கண்ட இரண்டு பணப் பரிவர்த்தனைகள் காணப்பட்டன.

S.No.	Date	Transaction Details	Amount
1.	06.06.2026	UPI-Trasfer – Kirubhakaran	15000
2.	20.08.2026	UPI-Transfer – Kannan (Highway Surveyor)	5000
		Total	**20,000**

மேற்கண்ட Gpay பணப் பரிவர்த்தனை சம்பந்தமாக விசாரித்தீர்கள். அதில் திரு.கண்ணன் ஹைவே சர்வேயர் ஆவார். திரு.கிருபாகரன் என்பவர் யார் என்று எனக்கு தெரியவில்லை. மேலும் மேற்படி மொத்த தொகையான **ரூ.3,15,999/-க்கு** திரு.ரவிசங்கர் என்பவர் அளித்த விளக்கம் திருப்திகராமக இல்லாததால் மேற்படி தொகைகள் அனைத்தும் பல்வேறு தருணங்களில் பெறப்பட்ட லஞ்சப்பணமாக இருக்ககூடும் என கருதப்பட்டது. இதற்கிடையில் மேற்படி நில அளவையர் திரு.ரவிசங்கர் என்பவரை பார்க்கவந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் பவித்ரா என்றும், தான் தனது ஒன்றுவிட்ட சகோதரர் திரு.குணசேகரன் என்பவரின் மனைவி திருமதி.பாலாமணி என்பவரது சொத்து சம்பந்தமாக TSLR குறித்து விசாரிக்க வந்ததாக தெரிவித்தார். அவரிடம் பணம் குறித்து கேட்க, அவர் தனது கைபையில் வைத்திருந்த ரூ.28,500/-எடுத்து ஆஜர் செய்து, தான் JSR என்ற பெயரில் சீட்டு கம்பெனி நடத்தி வருவதாகவும், கடந்த சனிக்கிழமை அன்று தனது வாடிக்கையாளர்களான திரு.முபாரக் அலி என்பவர் ரூ.25,000/- மற்றும் திரு.தினேஷ்குமார் என்பவர் ரூ.5000/- என மொத்தம் ரொக்கமாக ரூ.30,000/- கொடுத்ததாகவும், அதில் தான் ரூ.1,500/- செலவு செய்தது போக மீதி ரூ.28,500/-ஐ தன் வசம் வைத்திருந்தாக தெரிவித்தார். இது குறித்து மேற்படி முபாரக் அலி மற்றும் தினேஷ்குமார் ஆகியோர்களை செல்போன் மூலம் தொடர்பு கொண்டு விசாரிக்க அவர்கள் திருமதி.பவித்ரா தெரிவித்ததை ஒத்துகூறியதால் மேற்படி தொகை ரூ.28,500/-ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. முதல் தளத்தில் இருந்த பிறப்பு மற்றும் இறப்பு சான்று பதிவு செய்யும் அலுவலக அறையை பார்வையிட்டு அங்கிருந்த திருமதி.சித்ரகலா மற்றும் திருமதி.ராதிகா ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டதிலும், அவர்களது உடமைகள் மற்றும் செல்போன்களை சோதனை செய்ததிலும், அந்த அறையை பார்வையிட்டதிலும், அந்த பிரிவில் குறிப்பிடும்படி எதுவும் காணப்படவில்லை. மேலும் மேற்படி முதல் தளத்திலிருந்த நகராட்சி தலைவரின் அறையானது பூட்டப்பட்டிருந்தது. மேலும் சர்வே அறையின் அடுத்தாற்போல் அமைந்திருந்த நகரமைப்பு பிரிவிற்கு வந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் அஜித்குமார் என்றும், தான் 22.09.2026-ம் தேதி மதிய உணவு முடித்து விட்டு, மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அலுவகத்தில் கனிமவளம் தொடர்பான கலந்தாய்வு

கூட்டத்திற்கு சென்றுவிட்டதாகவும், பின்னர் அவ்வலுவலக நிர்வாக அலுவலர் திருமதி.பொன்மணி அவர்கள் அழைத்ததின் அன்றையதினம் 19.30 மணிக்கு அவ்வலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தார். பின்பு அவரிடம் பணம் பற்றி விசரிக்க தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று தெரிவித்தார். அதனை தொடர்ந்து அவர் வைத்திருந்த Samsung Galaxy A22 5G (Model:SM-A226B/DS) செல்போனில் இருந்த Google Pay பரிவர்த்தனைகளை பார்வையிட்டதில், ராணிப்பேட்டை SBI வங்கி கிளை கணக்கு எண்.40636546696-ன் பரிவர்த்தனைகளை ஆய்வு செய்ததில் கீழ் கண்ட பரிவர்த்தணைகள் காணப்பட்டது.

S. No.	Date	Transaction Details	Amount	Remarks
1	13.01.2026	Er.Mohamed Ashik	1000	LBS Engineer
2	20.01.2026	Mohmad Thoufic	20,000	LBS
3	21.01.2026	Christoper	1000	LBS
4	06.02.2026	Aqsaa Constructions	30000	LBS
5	09.02.2026	Aqsaa Constructions	1500	LBS
6	13.02.2026	Karthik Associats	2500	LBS
7	02.03.2026	Aqsaa Constructions	6400	LBS
8	04.03.2026	Christoper	1000	LBS
9	10.03.2026	Thirumoorthi	1000	LBS
10	28.03.2026	Veerapathiran Barath	3750	Flex Banner
11	08.04.2026	Sharmila	2000	LBS
12	05.05.2026	Ariffullah	3500	LBS
13	08.05.2026	Mohammed Fazil	7000	LBS
14	01.06.2026	Mohamed Ashik Makboorak	3,500	LBS Contractor
15	08.06.2026	Mohamed Ashik Makboorak	2,000	LBS Contractor
16	19.06.2026	Kadhar Ibrahim	1000	LBS
17	01.07.2026	Sri Agencies	750	Bribe for Flex Banner Permission
18	09.07.2026	Mohammed Fazil	5000	LBS
19	22.07.2026	Prakash	5000	LBS
20	11.09.2026	Prasana Venkatesh	3250	Bribe for Flex Banner Permission
21	11.09.2026	Hariharan	3000	Contractor
Total			**103400**	

மேற்படி பரிவர்த்தனைகள் குறித்து திரு.அஜித்குமாரை விசாரிக்க அவைகள் அனைத்தும் இந்த வருட ஆரம்பத்திலிருந்து பல்வேறு தருணங்களில் அவ்வலுவலகத்திற்கு கட்டிட அனுமதி கோரி வரும் விண்ணப்பங்கள் தொடர்பாக ஒரு சில கட்டிடப்பொறியாளர்களால் தனக்கு செலவுக்காக கொடுக்கப்பட்ட பணம் என்று தெரிவித்தார். மேலும் நகராட்சியில் பேனர் வைப்பதற்கு அனுமதி வழங்க சம்பந்தப்பட்ட இடத்தை தான் கள ஆய்வு செய்ய செல்வது வழக்கம் என்றும், அவ்வாறு பேனர்கள் வைப்பதற்காக அனுமதிகோரும் நபர்களிடமிருந்து பெறப்பட்ட தொகைகளும் அதில் அடங்கும் என்றும் தெரிவித்தார். எனவே மேற்படி தொகை ரூ.1,03,400/- ஆனது லஞ்சமாக திரு.அஜித்குமார் அவர்களால் வசூலிக்கப்பட்ட தொகை என்று கருதப்படுகிறது. மேலும் அவ்வலுவலக அலுவலர்களின் வாகனங்கள் முறையாக சோதனையிட்டதில் குறிப்பிடும்படி எதுவும் கைபற்றப்படவில்லை. மேலும் திடீர் சோதனையின்போது அவ்வலுவலகத்தின் பிரிவுகளில் பராமரிக்கப்பட்டு 5-எண்ணிக்கைகளான மேற்படி ஆவணங்களின் நகல் எடுக்கப்பட்டு அதில் நகராட்சி ஆணையாளர் அவர்களது சான்றொப்பம் பெறப்பட்டது. மேற்படி ஆவணங்கள் விபரம் சோதனை நடவடிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி திடீர் தணிக்கையின் போது விசாரணைக்காக கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.1,38,900/- ஆகும். மேலும் இந்த திடீர் சோதனையின்போது லஞ்சமாக பெறப்பட்டதாக கருதப்படும் தொகை ரூ.5,72,399/-க்கான டிஜிட்டல் பண பரிவர்த்தனையும் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட வரித்தொகையில் ரூ.1,21,023/-ஐ நகராட்சி கணக்கில் செலுத்தாமல் தற்காலிகமாக கையாடல் செய்துள்ள விபரம் கண்டறியப்பட்டு, திடீர் சோதனை நடந்துகொண்டிருந்த சமயத்தில் மேற்படி பணம் ரூ.1,21,023/- நகராட்சி கணக்கில் ஆன்லைன் மூலம் நகராட்சிக்கு வரவுவைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக திடீர் ஆய்வு நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டது. திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட மொத்தம் பணம் ரூ.1,38,900/-. மேலும் 8 வாக்குமூலங்கள், திடீர் ஆய்வு நடவடிக்கை மற்றும் இதர ஆவணங்களின் நகல்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். மேலும் மேற்படி மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் இயங்கிவரும் வருவாய் பிரிவு, பொறியில் பிரிவு மற்றும் நில அளவை பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளும், மேற்படி நகராட்சி ஆணையாளர் திருமதி.அமுதா அவர்களின்

நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் நிலையில் அவர்களுக்கு கீழ் பணிபுரியும் அவ்வலுவலக நிர்வாக அலுவலர் திருமதி.பொன்மணி என்பவர் ஆணையாளர் அவர்களின் அறிவுறுத்தல் அல்லது உத்தரவின்றி தொடர்ந்து 5-மாதங்கள் மேற்படி மூன்று பிரிவுகளிலிருந்தும், தலா ரூ.10,000/-வீதம் வசூலித்து அதனை ஆணையாளர் திருமதி.அமுதா அவர்களின் உயர் அதிகாரியான திரு.ராஜாராம் அவர்களின் அலுவலகம் சம்பந்தப்பட்ட நபரான கவின்முருகேஷன் என்பவரது G.pay கணக்கிற்கு அனுப்பி வைத்திருக்க வாய்ப்புள்ளதா என்பது விசாரணைக்குரியதாக இருப்பதாலும் அவ்வாறு தொடர்ந்து பணம் வசூலிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது தொடர்பாக ஆணையாளர் திருமதி.அமுதா அவர்களுக்கு தெரிந்தே நடந்திருக்கலாம் என்பதும், அதற்கு அவர் உடந்தையாக இருந்திருக்கலாம் என சந்தேகிக்கத்தக்க சூழ்நிலைகள் முதற்கட்டமாக தெரியவருகிறது. எனவே மேற்படி திடீர் தணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மேற்படி முறைகேடுகள் சம்மந்தமாக 1) திருமதி. R.அமுதா, நகராட்சி ஆணையர், மேட்டுப்பாளையம் நகராட்சி, கோவை, 2) திருமதி.M.பொன்மணி, நிர்வாக அலுவலர், மேட்டுப்பாளையம் நகராட்சி, கோவை, 3) திரு.S.ரவிசங்கர், நகர சார் ஆய்வாளர் நில அளவைப்பிரிவு மேட்டுப்பாளையம் நகராட்சி, கோவை, 4) திரு.S.அஜித்குமார், இளநிலை உதவியாளர், நகரமைப்பு பிரிவு, மேட்டுப்பாளையம் நகராட்சி, கோவை, 5) திரு.K.பிரேம்குமார், வருவாய் உதவியாளர், வருவாய் பிரிவு, மேட்டுப்பாளையம் நகராட்சி, கோவை, 6) திருமதி.V.பத்மபிரியா, வருவாய் உதவியாளர், வருவாய் பிரிவு, மேட்டுப்பாளையம் நகராட்சி, கோவை, 7) திருமதி.கல்பனா, இளநிலை உதவியாளர், அ2-இருக்கை எழுத்தர், மேட்டுப்பாளையம் நகராட்சி, கோவை மாவட்டம், 8) திரு.G.தேவதர்ஷன், அலுவலக உதவியாளர், பொது பிரிவு, மேட்டுப்பாளையம் நகராட்சி, கோவை, 9) திரு.D.கௌதம்தேவன், வருவாய் உதவியாளர்,வருவாய் பிரிவு, மேட்டுப்பாளையம் நகராட்சி, கோவை, 10) திரு.மணி, த/பெ.பழனிகவுண்டர், கதவு எண்.4C, சாந்திநகர், மேட்டுப்பாளையம் (தனி நபர்) மற்றும் 11) திரு.கவின்முருகேசன் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (Sdxxxxx) 23/9/2026 (N.விஜயகுமார்) துணை ஆய்வுகுழு அலுவலர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். இணைப்பு: 1) திடீர் சோதனை

நடவடிக்கை, 2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,38,900/- 3) கைப்பற்றப்பட்ட 5 ஆவண நகல்கள் மற்றும் 4) பதிவு செய்யப்பட்ட 8 வாக்குமூலங்கள். Sir, Received the complaint on 23.09.2026 at about 17.00 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.19/2026/AC/CB u/s 7(a), 7A, 7(a) r/w 12, 13(2) r/w 13(1)(a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 and u/s 316(5) BNS on 23.09.2026 at about 18.30 hrs. (Sdxxxxx) 23/09/2026 (D.SHEELA), Inspector of Police, Vigilance and Anti-Corruption, Coimbatore. மேற்படி பதிவு செய்யப்பபட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், திடீர் சோதனை நடவடிக்கைகள் மற்றும் துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் பதிவு செய்யப்பட்ட 8-வாக்குமூலங்கள் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான தனி நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

23/09/2026

(D.ஷீலா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோவை.